# 2015

## වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## ANNUAL PERFORMANCE REPORT


**පාර්ලිමේන්තුවේ ආණ්ඩු පක්ෂයේ ප්‍රධාන සංවිධායක කාර්යාලය**

**ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ.**

**பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசானின் அலுவலகம்**

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**

**OFFICE OF THE CHIEF GOVERNMENT WHIP OF PARLIAMENT**

**Sri Jayewardenepura Kotte.**

# 2015

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# Annual Performance Report

**ශීර්ෂය**
**தலைப்பு** } **018**
**Head**

2015.01.01 සිට 2015.12.31 දක්වා

2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை

From 01.01.2015 to 31.12.2015

**පාර්ලිමේන්තුවේ ආණ්ඩු පක්ෂයේ ප්‍රධාන සංවිධායක කාර්යාලය**

**පාර්ලිමේන්තුව**

**ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ.**

**பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் அலுவலகம்**

**பாராளுமன்றம்**

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

**OFFICE OF THE CHIEF GOVERNMENT WHIP OF PARLIAMENT**

**PARLIAMENT**

**Sri Jayewardenepura Kotte**

## *பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசானின் அலுவலகம்*

## *பாராளுமன்றம்- ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே*

### *நோக்கு :*

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சியின் பாராளுமன்ற விவகாரங்களை மிகத் திறம்பட நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் முன்னணி நிறுவனமாக செயற்படல்.

### *செயற்பணி :*

அரசாங்கக் கட்சியின் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான நோக்கங்களையும் குறிக்கோள்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள், கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய பிரேரிப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதும் அரசாங்கத்தின் பணிகளுக்காக பாராளுமன்றத்தினுள்ளும் அதற்கு வெளியேயும் அரசாங்கக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பை திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும் ஒழுங்கு செய்தலுமாகும்.

**<u>பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் பிரதான பணிகள் :</u>**

I. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற அரசாங்கப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி அரசாங்கக் கட்சியின் சகல நடவடிக்கைகளையும் திட்டமிடும் போது ஒத்துழைப்பை வழங்குதல், ஒழுங்கு செய்தல் மற்றும் இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஒருங்கிணைப்பு வேலைகளை நெறிப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

II. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள், கட்டளைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் ஏனைய பிரேரிப்புகள் போன்றவற்றின் சட்டரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

III. அரசாங்கக் கொள்கைகள் தொடர்பில் அரசாங்கக் கட்சியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை அறிவுறுத்தல் இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

IV. பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டங்களைக் கூட்டுதல், எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் அத்துடன் குறித்த கூட்டங்களின் சகல அறிக்கைகளையும் பேணுதல். அவற்றை கௌரவ அமைச்சர்களுக்கு விநியோகித்தல். எடுக்கப்படுகின்ற தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மீளாய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.

V. பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் பாராளுமன்றத்தின் கோரத்தைப் பேணுவதற்காக கௌரவ உறுப்பினர்களை அழைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்ச்சியாக கௌரவ உறுப்பினர்களின் வருகை அத்துடன் வெளியே செல்லல் தொடர்பில் கண்காணித்தல்.

VI. பத்திரிகை கலந்துரையாடல்களுக்கு அழைப்பு விடுத்தல் மற்றும் அறிக்கைகளை விடுத்தல்.

VII. பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல வினாக்கள் சமர்ப்பிக்குமிடத்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பெறப்படுகின்ற விடைகளை கௌரவ முதற்கோலாசானுக்கு சமர்ப்பித்து உரிய அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர், பிரதி அமைச்சர் பாராளுமன்ற சபைக்குள் பிரசன்னமாகி இருக்காதவிடத்து குறித்த அமைச்சருக்காக கௌரவ முதற்கோலாசான் விடைகளை அளிப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்தல்.

VIII. பாராளுமன்ற விவாதங்களின் போது அரசாங்கக் கட்சிக்காக கலந்து கொள்ளுகின்ற கௌரவ அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரித்தல் அத்துடன் உரையாற்றுவதற்கான நேரத்தினை ஒதுக்குதல்.

IX. பாராளுமன்ற விவாதங்களில் கலந்து கொள்ளுகின்ற அரசாங்கக் கட்சியின் அமைச்சர்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான பின்னணி அறிக்கைகள், துணைச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் போன்ற தகவல்களை வழங்குதல்.

X. பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டங்கள் மற்றும் கட்சித் தலைவர்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளல் இந்தக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு அமைவாக அரசாங்கக் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்தல்.

XI. பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம், சபை ஆவணமாக்கல் அலுவலகம், ஹன்சாட் திணைக்களத்துடன் புரிந்துணர்வுடன் உள்ளக செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல்.

XII. பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் போது அதற்காக அரசாங்கக் கட்சி உறுப்பினர்களை அழைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

XIII. பாராளுமன்றத்தின் கௌரவ சபை முதல்வர் மற்றும் சபை முதல்வர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து அரசாங்கக் கட்சி நடவடிக்கைகளை சிறந்த விதத்தில் ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல்.


XIV. அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து பாராளுமன்றத்தில் இதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.

XV. கௌரவ உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் போது விடுமுறைக்கான விண்ணப்பங்கள் உரிய அனுமதிக்காக சிபாரிசு செய்து சமர்ப்பித்தல்.

## பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் கட்டமைப்பு

இந்த அலுவலக நடவடிக்கைகள் பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசானின் அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகள் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் செயலாளரின் நெறிப்படுத்தல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் செயலாளர், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பணிபுரிவதுடன் இவருக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவர், இரண்டு உதவிச் செயலாளர்கள் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 41 பேரைக் கொண்ட பதவியணியொன்று உள்ளது.

## கட்டமைப்பு



# பதவியணித் தகவல்கள்

2015/12/31 திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2015.12.31 திகதியன்று எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | 1 | 1 | 0 |
| 02 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 03 | உதவிச் செயலாளர் | 2 | 1 | 1 |
| 04 | ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிக) | 2 | 2 | 0 |
| 05 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 06 | மொழிபெயர்ப்பாளர் | 2 | 2 | 0 |
| 07 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 3 | 0 | 3 |
| 08 | முகாமைத்துவ உதவியாளர் | 12 | 11 | 1 |
| 09 | சாரதி | 8 | 8 | 0 |
| 10 | அலுவலக உதவியாளர் | 8 | 8 | 0 |
| 11 | அ.உ (அமய) | 2 | 2 | 0 |
| | மொத்தம் | 42 | 37 | 5 |

# மனித வள முகாமைத்துவம்

*2015 ஆம் ஆண்டின் பதவியணி நியமனங்கள் :*

| தொடர் இல | உத்தியோகத்தர் பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 01 | திரு.டீ டீ ஏ குணசேகர | கௌரவ அரசாங்கக்கட்சி முதற்கோலாசானின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | 2015.09.01 |

*2015 ஆம் ஆண்டின் பதவியணி இடமாற்றங்கள் (அலுவலகத்திற்குள்):*

| தொடர் இல | உத்தியோகத்தர் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 01 | திருமதி ஆர் பீ எம் எஸ் ராஜபக்ஸ | உதவிச் செயலாளர் | 2015.02.11 |
| 02 | திரு. ஆர் எம் ஏ செனவிரத்ன | நிருவாக உத்தியோகத்தர் | 2015.01.30 |
| 03 | திரு. என் ஜீ எல் யு எஸ் பண்டார | மொழிபெயர்ப்பாளர் | 2015.01.27 |
| 04 | திரு. எம் எஸ் எம் றியாஸ் | மொழிபெயர்ப்பாளர் | 2015.02.19 |
| 05 | திரு. எஸ் கே நந்தசேன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.01.27 |
| 06 | திரு. எச் ஏ குணரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.01.28 |
| 07 | திருமதி. கங்கா கட்டுகம்பொல | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.02.20 |
| 08 | திருமதி. என் டீ விக்ரமஆரச்சி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.04.10 |
| 09 | திரு. ஜீ எஸ் நிக்லஸ் | அ. ப | 2015.01.28 |
| 10 | திரு. கே டப்லிவ் பீ ஜயந்த | சாரதி | 2015.01.28 |
| 11 | திரு. எச் டீ எஸ் கொட்வின் | சாரதி | 2015.01.29 |
| 12 | திரு ஆர் எம் ஜீ பிரேமசிரி | சாரதி | 2015.01.21 |
| 13 | திரு. டி எஸ் வீரபத்தன | சாரதி | 2015.01.29 |

*2015 ஆம் ஆண்டின் பதவியணி இடமாற்றங்கள் (அலுவலகத்திற்கு வெளியே):*

| தொடர் இல | உத்தியோகத்தர் பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு.எம் டப்லிவ் ஜகத் குமார | உதவிச் செயலாளர் | 2015.03.31 |
| 02 | திரு.ஜே டப்லிவ் சீ செனவிரத்ன | நிருவாக உத்தியோகத்தர் | 2015.01.25 |
| 03 | திரு.யு சீ பீ ஹேரத் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.01.22 |
| 04 | திருமதி. ஏ வீ பீ மல்லிகா | தட்டெழுத்தாளர்/எழுதுநர் | 2015.01.31 |
| 05 | திருமதி.பி எச் டீ எஸ் எச் பர்னோல்டஸ் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.01.22 |
| 06 | திரு.ஏ சீ எஸ் எம் ரஹுமான் | மொழிபெயர்ப்பாளர் | 2015.02.16 |
| 07 | செல்வி.பீ கே ஜீ என் எம் கீர்த்திசிங்க | மொழிபெயர்ப்பாளர் | 2015.01.22 |
| 08 | திரு.எம் தயானந்த | சாரதி | 2015.01.22 |
| 09 | திரு.டப்லிவ் பீ ரொட்ரிகோ | சாரதி | 2015.01.23 |
| 10 | திரு.ஆர் ஏ சீ ஜே கே ரத்நாயக்க | சாரதி | 2015.02.27 |
| 11 | திரு.டப்லிவ் ஏ டீ சிரிலால் | சாரதி | 2015.01.22 |

***2015 ஆம் ஆண்டின் பதவியணி ஓய்வு பெறல்***

| **தொடர் இல** | **உத்தியோகத்தர் பெயர்** | **பதவி** | **ஓய்வு பெற்ற திகதி** |
|---|---|---|---|
| 01 | திரு. வீ எம் பெரேரா | கௌரவ முதற்கோலாசானின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | 2015.01.19 |
| 02 | திரு. பீ வன்னி ஆரச்சி | ஒருங்கிணைப்புச் செயலாளர் | 2015.01.02 |

# மனித வள அபிவிருத்தி

## *2015 ஆம் ஆண்டின் உள்நாட்டுப் பயிற்சிகள்*

| உத்தியோகத்தர் பெயர் | பதவி | பயிற்சி | பயிற்சி நிறுவனம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|
| திரு. ஜே பீ எல் விதானகே | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் 111 தரம் | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 2015.10.03 தொடக்கம் 2015.10.16 வரை 2015.10.26 தொடக்கம் 2015.10.30 வரை |
| திரு.ஜே எம் லியனகம<br>திரு.உபேந்திர<br>திரு.என் டீ விக்ரமஆரச்சி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் 111 தரம் | சிகேஸ் பயிற்சி | நிதி அமைச்சு | 2015.06.25 (ஒரு நாள் பயிற்சி) |
| திரு. சதுர பசன் மீகஸ்தெனிய<br><br>திரு.ஜ மஹேஸ் விஜேபண்டார | அலுவலக உதவியாளர் | உயர் தொழில் ஆக்கத்திறனுக்கான அலுவலகப் பணியாளர்களின் பணிகள் | தேசிய தொழிற் கற்கைள் நிறுவகம் | 2015.05.28 |
| சகல பதவியணியினரும் | | உற்பத்தித்திறன் விருத்தி வதிவிடப் பயிற்சி | சிலாபம் | 2015.10.01 தொடக்கம் 2014.10.02 வரை |

## *2015 ஆம் ஆண்டின் வெளிநாட்டுப் பயிற்சிகள்*

| உத்தியோகத்தர் பெயர் | பதவி | பயிற்சி | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திரு.சீ குறுப்பு | செயலாளர் | இலங்கை செய்தி வெளியீடு பற்றிய உயர்மட்ட நிருவாக உத்தியோகத்தர்களின் பயிற்சி பாடநெறி (சீனா) | 2015.12.27 தொடக்கம் 2016.01.06 வரை |
| திருமதி. மஞ்ஜுலா ராஜபக்ஷ | உதவிச் செயலாளர் | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அரச மனிதவள முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு | 2015 செப்தெம்பர் 08 தொடக்கம் 28 வரை |

# 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

## 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரதான பணிகள்.

- 2015.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உரியவாறு பின்வரும் சட்டமூலங்கள் மற்றும் 16 பிரேரிப்புகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக அரசாங்கக் கட்சியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்து தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

| தொடர் இலக்கம் | சட்டத்தின் பெயர் | சட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதி | வர்த்தமானியில் பிரசுரித்த திகதி |
|---|---|---|---|
| 01 | ஒதுக்கீட்டு (திருத்த) சட்ட மூலம் 2015 | 2015.02.07 | 2015.02.13 |
| 02 | 2015 ஆம் ஆண்டின் 02 இலக்க கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள்(திருத்தச்) சட்டம். | 2015.03.02 | 2015.03.06 |
| 03 | 2015 ஆம் ஆண்டின் 3 இலக்க புகையிலைமற்றும் மதுசாரம் (திருத்தம்) மீதான தேசிய அதிகார சபை சட்டம். | 2015.03.03 | 2015.03.06 |
| 04 | 2015 ஆம் ஆண்டின் 4 இலக்க குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் | 2015.03.07 | 2015.03.13 |
| 05 | 2015 ஆம் ஆண்டின் 5 இலக்க தேசியமருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டம் | 2015.03.19 | 2015.03.20 |
| 06 | 2015 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைந்த) சட்டம். | 2015.04.06 | 2015.04.10 |
| 07 | 2015 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க குடிவருவோர் குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் | 2015.06.03 | 2015.06.05 |
| 08 | 2015 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க தேசியஆசிரியர் கல்விஅதிகார சபை (நீக்கல்) சட்டம் | 2015.06.03 | 2015.06.05 |
| 09 | 2015 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டம் | 2015.10.30 | 2015.10.30 |
| 10 | 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2015.10.30 | 2015.10.30 |
| 11 | 2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தம்) சட்டம் | 2015.10.30 | 2015.10.30 |
| 12 | 2015 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டம் | 2015.10.30 | 2015.10.30 |
| 13 | 2015 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் | 2015.10.30 | 2015.10.30 |
| 14 | 2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பந்தய சூதாட்ட வரி விதிப்பனவு (திருத்தச்) சட்டம் | 2015.10.30 | 2015.10.30 |
| 15 | 2015 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் | 2015.12.03 | 2015.12.04 |
| 16 | 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டம் | 2015.12.19 | 2015.12.23 |

- 2015 ஆம் ஆண்டின் பாராளுமன்ற அரசாங்கக் கட்சியின் குழுக் கூட்டம் பின்வருமாறு 14 தடவைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இந்த கூட்டங்களின் அறிக்கைகளை தயாரித்து

அதிமேதகைய சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ சபை முதல்வர் உட்பட அமைச்சர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| **மாதம்** | **திகதி** | **மாதம்** | **திகதி** |
|---|---|---|---|
| சனவரி | 29 | யூலை | - |
| பெப்ரவரி | 10,18 | ஆகஸ்ட் | - |
| மார்ச் | 03 | செப்தெம்பர் | 01,23 |
| ஏப்ரல் | 07 | ஒக்தோபர் | 20 |
| மே | 20 | நவம்பர் | 03,06,20 |
| யூன் | 09,23 | திசெம்பர் | - |

- அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டங்களில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்து அதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்புபடுத்தப்பட்டன.

- 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2015.10.23ஆம் திகதியன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் வரவு செலவுத் திட்ட உரை 2015.11.20ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இது தொடர்பில் இரண்டாவது முறை வாசிப்பின் போதான விவாதம் 2015.11.21ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு 2015.12.04 வரை நடைபெற்றதுடன் 2015.12.05 ஆந் திகதி வாக்கெடுப்பு நடைபெற்றது. குழு நிலை விவாதம் ஆம் திகதி தொடக்கம் 2015.12.07 தொடக்கம் 2015.12.18 வரை நடாத்தப்பட்டது. 3 ஆம் முறை வாசிப்பின் போதான வாக்களிப்பு 2015.12.19 ஆம் திகதி அன்று நடைபெற்றது.

- வரவு செலவுத் திட்ட விவாதங்களின் போது மற்றும் 2015 ஆம் ஆண்டின் பாராளுமன்றம் கூட்டப்பட்ட ஏனைய தினங்களிலும் நடாத்தப்பட்ட விவாதங்களின் போதும் பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதங்களின் போதும் அரசாங்கக் கட்சிக்காக உரையாற்றவிருந்த கௌரவ உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் விவாதங்களுக்கான நேர ஒதுக்கீட்டு நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் விவாதங்களுக்குத் தேவையான முக்கிய தகவல்கள் மற்றும் தரவுகள் கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெறுகின்ற காலப் பகுதிக்கு மேலதிகமாக பொதுவாக எல்லா மாதங்களினதும் முதலாவது ஞாயிறுக்குப் பின்னர் வருகின்ற வாரத்தின் செவ்வாய் தொடக்கம் நான்கு நாட்கள் மற்றும் மூன்றாவது ஞாயிறுக்குப் பின்னரான வாரத்தின் செவ்வாய் தொடக்கம் நான்கு நாட்கள் என மாதமொன்றுக்கு எட்டு நாட்கள் பாராளுமன்ற கூட்டங்கள் நடைபெறும். சகல பாராளுமன்ற அமர்வு வாரம் அல்லது நாளுக்குரிய நிகழ்ச்சித் திட்டம் பாரளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான குழுவினால் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் கௌரவ அமைச்சர்கள் உறுப்பினர்களுக்கு அறிவித்தல். வாக்களிப்புக்காகக் கலந்து கொள்ளுமாறு அறிவித்தல். இந்த அலுவலகத்திற்குக் கையளிக்கப்பட்ட பிரதான பணிகளாகும். அதற்கமைவாக கடிதங்கள் மற்றும் தொலை நகல், குறுஞ் செய்தி மற்றும் தொலைபேசி ஊடாக அவ்வப்போது கௌரவ அரசாங்கக் கட்சி உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டன.

- வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றும் விவாதங்களில் மற்றும் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகின்ற ஏனைய சட்டங்கள் தொடர்பிலான விவாதங்களின் போதும் தேவையான பின்னணி அறிக்கைகளை வழங்கி அரசாங்கக் கட்சியின் கௌரவ உறுப்பினர்களை அறிவுறுத்தப்பட்டன.

- அத்துடன் சகல பாராளுமன்ற அமர்வு தினங்களில் வாய்மூல வினாக்களுக்கான விடைகளை விடயத்துக்கப் பொறுப்பான அமைச்சுக்களின் ஊடாகப் பெற்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக அந்தந்த அமைச்சுக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் வாய்மூல விடையை வழங்குவதற்குரிய அமைச்சுக்களின் மாண்புமிகு அமைச்சர்கள் அல்லது பிரதி அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இல்லாத சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் கௌரவ முதற்கோலாசான் ஊடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க் கட்சியின் சகல உறுப்பினர்களினதும் அமைச்சுச் செயலாளர்களினதும், அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் தனிப்பட்ட பதவியணியினரின் தொலைபேசி இலக்கங்கள், பெக்ஸ் இலக்கங்கள் மற்றும் முகவரிகள் (கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்கள்) தொடர்பிலான தகவல்களைச் சேகரித்து குறித்த தகவல்கள் உள்ளடங்கிய ஆவணமொன்றை இந்த பதவியணியினால் தயாரிக்கப்பட்டு இது அவ்வப்போது இற்றைவரைப்படுத்திப் பேணப்பட்டு வருகின்றது. இந்த ஆவணத்தை அரசாங்க அச்சகத்தின் ஊடாக அச்சிட்டு சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம், சகல உறுப்பினர்கள், சகல தூதரகங்கள் மற்றும் சகல அமைச்சுக்கள், மாகாண சபைகள், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டு பாராளுமன்ற அமர்வு தினங்கள் தொடர்பிலான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட நாட்காட்டி சகல கௌரவ உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட தேவையான அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

- பாராளுமன்றக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற தினங்களில் அரசாங்கக் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர்களின் பாராளுமன்றப் பங்களிப்பை மேற்பார்வை செய்வதற்காக இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் கடமை முறைமாற்று அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நுழைவாயில் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ கூடத்தில் பிரசன்னமாக இருந்து மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வாக்களிப்பு நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் அரசாங்கக் கட்சியின் வாக்களிப்புத் தொடர்பில் தகவல்கள் இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்களைக் கொண்டு அறிக்கை ஊடாகப் பெற்று இந்தத் தகவல்கள் கௌரவ முதற்கோலாசானுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

- தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கக் கட்சியின் கௌரவ உறுப்பினர்களுக்கு அவசர தகவல்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அவர்களுடன் தொடர்சியான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

- அரசாங்கக் கட்சியின் கௌரவ உறுப்பினர்களின் விவாதங்கள் உள்ளடக்கப்பட்ட இறுவட்டுக்களை கௌரவ உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர்களினால் இந்த அலுவலகத்திற்கு அனுப்புகின்ற கோரிக்கைகளுக்கு உரியவாறான ஆவணப் பணிகள் மற்றும் தட்டெழுத்துப் பணிகளை மேற்கொண்டு ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டன.

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இது பற்றி அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் ஊடாக அதிமேதகைய சனாதிபதி / மாண்புமிகு பிரதம அமைச்சர்களுக்கு அறிவித்து தேவையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலகத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தின் பௌதிக மற்றும் மனித வளங்களை வினைத்திறனுடனும் ஆக்கத் திறன் வாய்ந்ததுமாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் இவைகள் மேற்பார்வை செய்யப்பட்டன.

# 2015 கணக்குகள் தொடர்பான விபரங்கள்

## *2015 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளும் செலவினங்களும் :*

திணைக்களத்தின் பெயர் : பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசானின் அலுவலகம்

செலவுத் தலைப்பு : 018

நிகழ்ச்சித் திட்ட இலக்கமும்

பெயரும் : 01 தொழிற்பாட்டு நிகழ்சித் திட்டம்

கருத்திட்ட இலக்கமும்

பெயரும் : 01 பொது நிருவாகமும் தாபன சேவைகளும்

## *மூலதனச் செலவினம்:*

| செலவுத் தலைப்பு இலக்கம் | செலவு விபரம் | (1) வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு | (2) நி.பி.66 மற்றும் நி.பி.69 நியதிகளின் படியான மாற்றம்,குறைநிரப்பு ஒதுக்கீடு,மதிப்பீட்டு.ஒதுக்கீடு | (3) மொத்த தேறிய ஒதுக்கீடு (1+2) | (4) மொத்த செலவினம் | (5) தேறிய விளைவுச் சேமிப்புகள் (3-4) |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 2002 | இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும் | 150,000 | - | 150,000 | 49,097 | 100,903 |
| 2003 | வாகனங்கள் | 800,000 | - | 800,000 | 376,950 | 423,050 |
| 2102 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 600,000 | - | 600,000 | 591,636 | 8,364 |
| 2401 | பதவியணிப் பயிற்சிகள் | 300,000 | - | 300,000 | 263,490 | 36,510 |
| | மொத்தம் | 1,850,000 | | 1,850,000 | 1,281,173 | 568,827 |

## *மீண்டுவரும் செலவினம்:*

| கருத்திட்ட இலக்கம் பெயர்,ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்குமான ஏனைய செலவினங்கள் | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு | குறைநிரப்பு ஒதுக்கீடு, மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு. ஒதுக்கீடு | நி.பி.66 மற்றும் நி.பி.69 நியதிகளின் படியான மாற்றம் | மொத்த தேறிய ஒதுக்கீடு (1+2+3) | மொத்த செலவினம் | தேறிய விளைவுச் சேமிப்புகள் ( 4- 5) |
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| <u>கருத்திட்ட இலக்கம் 01 மற்றும் பெயர்:</u> பொது நிருவாகமும் தாபன சேவைகளும் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 29,665,000 | - | - | 29,665,000 | 29,437,737 | 227,263 |
| ஏனைய செலவுகள் | 8,785,000 | - | 4,705,000+<br>4,705,000- | 8,785,000 | 8,785,000 | 209,949 |
| முழு மொத்தம் | 38,450,000 | - | - | 38,450,000 | 38,012,788 | 437,212 |

# 2015 ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவின மற்றும் மூலதனச் செலவினப் பொழிப்பு

| விபரம் | 2014 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | 2015 ஆண்டின் மொத்த தேறிய ஒதுக்கீடு ரூ | 2015 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | தேறிய விளைவுச் சேமிப்புகள் ரூ |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் | 34,229,449 | 38,450,000 | 38,012,788 | 437,212 |
| மூலதன | 1,561,047 | 1,850,000 | 1,281,173 | 568,827 |
| மொத்தம் | 35,790,496 | 40,300,000 | 39,293,961 | 1,006,039 |

2014 ஆம் ஆண்டின் அரசாங்க ஊழியர்களின் முற்பணம் "பீ" கணக்கு - விடய இலக்கம் 018011

| விபரம் | 2014 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | 2015 ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ | 2015 ஆண்டின் திருத்திய மதிப்பீடு ரூ | 2015 ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூ | எல்லை தாண்டிய மீதி ரூ |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 4,523,590 | - | - | 4,550,794 | - |
| வருடத்தின் மொத்தப் பற்று | 1,925,100 | 1,500,000 | 1,690,000 | 3,888,597 | - |
| வருடத்தின் மொத்த வரவு | 1,897,896 | 1,100,000 | 1,290,000 | 3,795,327 | - |
| பற்று மீதியின் உச்ச எல்லை | 4,550,794 | 6,500,000 | 6,500,000 | 4,644,064 | - |